பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21
முன்னுரை 23
1 திக்ருல்லாஹ் என்றால் 25
1. குர்ஆன் ஒரு திக்ர் 25
2. தஸ்பீஹ், தஹ்லீல், தக்பீர் 26
3. ஸுன்னத்தான துஆக்கள் 26
4. விதியை நினைவுகூர்தல் 26
5. அல்லாஹ்வின்மீது சத்தியம் 27
6. தொழுகையும் ஒரு திக்ர் 27
7. தவ்பா ஒரு திக்ர் 28
2 குர்ஆன் ஒரு திக்ர் 29
3 தஸ்பீஹ், தஹ்லீல், தக்பீர் 40
4 ஸுன்னத்தான பிரார்த்தனைகள் 41
5 விதியை நினைவுகூர்தல் 44
6 அல்லாஹ்வின் மீதான சத்தியம் 50
7 தொழுகை 52
8 பாவமன்னிப்புக் கோருதல் 54
இறுதியாக 55

1

திக்ருல்லாஹ் என்றால்

❀

الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ قُلُوبُهُمْ بِذِكْرِ اللَّهِ أَلَا بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ

'அவர்கள்தாம் அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்கள்; அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வதால் அமைதி அடைகின்றன. அறிந்துகொள்ளுங்கள், அல்லாஹ்வை நினைவுகூர்வதால்தான் உள்ளங்கள் அமைதியடைகின்றன.' *(குர்ஆன் 13:28)*

இந்த வசனத்தில் 'திக்ருல்லாஹ்' (அல்லாஹ்வை நினைவுகூர்தல்) என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு விளக்கங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் சரியானவையே. 'திக்ருல் லாஹ்' என்பது அவை அனைத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது.

1. குர்ஆன் ஒரு திக்ர்

அறிஞர்களில் சிலர் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திக்ர் என்பது குர்ஆனையே குறிக்கும் என்று கூறுகிறார்கள். அவர்களின் இக்கூற்றுக்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அவை:

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

'நாமே இந்தக் குர்ஆனை இறக்கினோம். நாமே இதனைப் பாதுகாப்போம்.' *(குர்ஆன் 15:9)*

இங்கு குர்ஆனைக் குறிப்பதற்கு திக்ர் என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது.

إِنَّ الَّذِينَ كَفَرُوا بِالذِّكْرِ لَمَّا جَاءَهُمْ وَإِنَّهُ لَكِتَابٌ عَزِيزٌ

'எவர்கள் 'அறிவுரை' தங்களிடம் வந்த பின்னரும் அதனை நிராகரித்து விடுகிறார்களோ அவர்கள் மறுமையில் தங்கள் நிலைமையை உணர்ந்துகொள்வார்கள். இது கண்ணியமிக்க வேதமாகும்.' *(குர்ஆன் 41:41)*

இங்கும் குர்ஆனைக் குறிப்பதற்கு திக்ர் என்ற வார்த்தை பயன் படுத்தப்பட்டுள்ளது.

وَهَذَا ذِكْرٌ مُبَارَكٌ أَنْزَلْنَاهُ أَفَأَنْتُمْ لَهُ مُنْكِرُونَ

'அருள்வளம்மிக்க இந்த அறிவுரையை நாமே இறக்கியுள்ளோம். நீங்கள் இதனை மறுக்கிறீர்களா?' (குர்ஆன் 21:50)

இந்த வசனத்திலும் குர்ஆனைக் குறிப்பதற்கு திக்ர் (அறிவுரை) என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. தஸ்பீஹ், தஹ்லீல், தக்பீர்

அறிஞர்களில் சிலர் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திக்ர் என்பது 'ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர்' போன்ற வார்த்தைகளால் அவனைப் புகழ்ந்து நினைவு கூர்தலைக் குறிக்கும்' என்று கூறுகிறார்கள்.

3. ஸுன்னத்தான துஆக்கள்

அறிஞர்களில் சிலர் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திக்ர் என்பது சூழ்நிலைக்கேற்ப நபியவர்கள் நமக்குக் கற்றுத்தந்த, அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய திக்ருகளைக் குறிக்கும் என்று கூறுகிறார்கள். உதாரணமாக: கோபம் ஏற்படும்போது, பதற்றம் ஏற்படும்போது, வுளூ செய்யும்போது மற்றும் இதர சமயங்களில் ஓத வேண்டிய திக்ருகள்.

4. விதியை நினைவுகூர்தல்

அறிஞர்களில் சிலர் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திக்ர் என்பது அல்லாஹ் விதித்த விதியை நினைவுகூர்வதைக் குறிக்கும் என்று கூறுகிறார்கள். அதாவது, அனைத்து விவகாரங்களும் ஏற்கனவே விதிக்கப்பட்டுவிட்டன என்று நினைவுகூர்தலைக் குறிக்கும். இக்கூற்றுக்கு ஆதாரமாகப் பின்வரும் வசனத்தைக் கூறுகிறார்கள்:

مَا أَصَابَ مِنْ مُصِيبَةٍ إِلَّا بِإِذْنِ اللَّهِ وَمَنْ يُؤْمِنْ بِاللَّهِ يَهْدِ قَلْبَهُ

'அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்தத் துன்பமும் ஏற்படுவ தில்லை. எவர் அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வைப்பாரோ அவரது உள்ளத்திற்கு அவன் வழிகாட்டுகிறான்.' (குர்ஆன் 64:11)

3

தஸ்பீஹ், தஹ்லீல், தக்பீர்

❀

நாம் முன்பு குறிப்பிட்டவாறு ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற திக்ருகளையும் திக்ர் என்ற சொல் குறிப்பிடும். இவற்றின் மூலம் அல்லாஹ் உள்ளங்களைப் பலப்படுத்தி அவற்றுக்கு அமைதியளிக்கிறான்.

ஒருவர் ஸுப்ஹானல்லாஹ் என்று அல்லாஹ்வின் தூய்மை யைப் பறைசாற்றினால், அல்ஹம்துலில்லாஹ் என்று அவனைப் புகழ்ந்தால், அல்லாஹு அக்பர் என்று அவனைப் பெருமைப் படுத்தினால் ஷைத்தான் அவரை விட்டும் விலகி ஓடிவிடுகிறான். அல்லாஹ்வை நினைவுகூர்வதால் ஷைத்தான் பின்னால் விலகி யோடி மறைந்துவிடுகிறான். அவனது செயல்பாடு குறைந்து பலவீனமடைந்துவிடுகிறது. அச்சமயத்தில் உள்ளங்கள் அமைதி யடைகின்றன. அவற்றின்மீது நிம்மதி இறங்குகிறது.

அல்லாஹ்வை நினைவுகூர்பவர், அல்லாஹ்வைப் புகழ்பவர் விரட்டப்பட்ட ஷைத்தானிடமிருந்து பாதுகாக்கப்பட்ட ஒரு வலுவான கோட்டையில் இருக்கின்றார். அதுமட்டுமின்றி, நினைவு கூர்பவர் அவருடைய செயலின் காரணமாக கூலி பெறுகிறார். அதனால் அவரது அந்தஸ்து உயர்ந்து அவரின் பாவங்கள் குறைந்து விடுகின்றன. இந்தப் பாவங்கள்தான் மனநெருக்கடியை, பதற்றத்தை உள்ளங்களில் ஏற்படுத்துகின்றன. அவற்றின் பாதிப்பு நீங்கியவுடன் உள்ளம் அமைதியடைந்து நிம்மதியை உணர்கிறது.

4

ஸுன்னத்தான பிரார்த்தனைகள்

❀

நபி ﷺ அவர்கள் கற்றுத்தந்த, அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய திக்ருகளையும் இச்சொல் குறிப்பிடும். அவற்றின் மூலம் உள்ளங்கள் அமைதியடைகின்றன. உதாரணமாக: ஒரு மனிதன் பயமுறுத்தக்கூடிய ஓரிடத்திற்கு வந்துசேர்ந்தால் நபியவர்கள் கூறிய பின்வரும் ஹதீஸை நினைவுகூருகிறார்:

مَنْ نَزَلَ مَنْزِلًا ثُمَّ قَالَ: أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ, لَمْ يَضُرَّهُ شَيْءٌ حَتَّى يَرْتَحِلَ مِنْ مَنْزِلِهِ ذَلِكَ

எவரேனும் ஓரிடத்திற்கு வந்துசேர்ந்து, பின்னர் 'அல்லாஹ்வின் முழுமையான வார்த்தைகளைக் கொண்டு, அவன் படைத்த வற்றின் தீங்கை விட்டும் நான் பாதுகாவல் தேடுகிறேன்' என்று கூறினால் அவர் அங்கிருந்து செல்லும் வரை எதுவும் அவருக்குத் தீங்கு விளைவிக்காது. *(முஸ்லிம் 2708)*

இவ்வாறு அல்லாஹ்வை நினைவுகூர்ந்து அவனிடம் பாதுகாவல் தேடியதால் அவரது உள்ளம் அமைதியடைகிறது. அவர் நிம்மதியை உணர்கிறார். இது அவரது நம்பிக்கையை, இறைத்தூதரின் சொல்லை உறுதியாக நம்புவதைப் பொறுத்தது.

அதே போன்று ஒருவர் ஏதேனும் ஒரு கூட்டத்தின் அச்சுறுத்தலுக்கு ஆளானால், எதிரிகளால் அச்சுறுத்தப்பட்டபோது நம்பிக்கையாளர்கள் கூறியதை நினைவுகூருகிறார்.

الَّذِينَ قَالَ لَهُمُ النَّاسُ إِنَّ النَّاسَ قَدْ جَمَعُوا لَكُمْ فَاخْشَوْهُمْ فَزَادَهُمْ إِيمَانًا وَقَالُوا حَسْبُنَا اللَّهُ وَنِعْمَ الْوَكِيلُ

'அவர்களிடம் மக்கள் 'பகைவர்கள் உங்களுக்கெதிராகப் பெரும் படையுடன் திரண்டுள்ளார்கள். எனவே, அவர்களுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்' என்று கூறியபோது அது அவர்களது நம்பிக்

7

தொழுகை

❀

தொழுகையில் அல்லாஹ்வை நினைவுகூர்வதும் திக்ர்தான். அல்லாஹ் கூறுகிறான்:

وَأَقِمِ الصَّلَاةَ لِذِكْرِي

'என்னை நினைவுகூர்வதற்காகத் தொழுகையைத் தவறாமல் கடைப்பிடிப்பீராக.' (குர்ஆன் 20:14)

இவ்வசனத்திற்கு இரண்டு பொருள்கள் கொள்ளலாம்.

1. தொழுகையில் என்னை நினைவுகூர்வதற்காக.
2. 'என் நினைவை நீர் பெறுவதற்காக தொழுகையைக் கடைப் பிடிப்பீராக.'

فَاذْكُرُونِي أَذْكُرْكُمْ

'என்னை (எல்லா நேரங்களிலும்) நினைவுகூருங்கள். நானும் உங்களை நினைவுகூருவேன்' (குர்ஆன் 2:152)

என்று அல்லாஹ் கூறுவதைப் போன்று. மேலும் பின்வரும் ஹதீஸ் குத்ஸீயில்[2] கூறப்பட்டதைப்போன்று:

وَإِنْ ذَكَرَنِي فِي مَلَإٍ ذَكَرْتُهُ فِي مَلَإٍ خَيْرٍ مِنْهُمْ

2 ஹதீஸ் குத்ஸீ: நபி ﷺ அவர்கள் எவற்றை 'அல்லாஹ் கூறினான்..' என்றோ, 'உங்கள் இறைவன் கூறினான்' என்றோ தன் வார்த்தைகளை அல்லாஹ்வுடன் இணைத்துக் கூறுகிறார்களோ அவற்றையும், அல்லது நபித்தோழர், 'நபியவர்கள் தம் இறைவனிடமிருந்து அறிவித்தார்கள்' என்று கூறினாரோ அவற்றையும் இந்தப் பெயரால் குறிப்பிடப்படும். ஹதீஸ் - நபிமொழி; குத்ஸீ - பரிசுத்தமானது. (கவாயித் அத்தஹ்தீஸ் மின் புநூன் முஸ்தலிஹ் அல்ஹதீஸ், ப: 65)

‘நீ என்னை உன் மனதில் நினைவுகூர்ந்தால் நானும் உன்னை என் மனதில் நினைவுகூருவேன். நீ என்னை ஒரு கூட்டத்தில் நினைவுகூர்ந்தால் நான் அவர்களைவிட சிறந்த கூட்டத்தில் உன்னை நினைவுகூருவேன்’ (அபூ ஹுறைறா ﵁, புகாரீ 7405)

தொழுகையின் மூலம் உள்ளங்கள் அமைதியடைகின்றன.

كَانَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم إِذَا حَزَبَهُ أَمْرٌ صَلَّى

எனவே, நபியவர்கள் ஏதேனும் விவகாரம் சிக்கலாகிவிட்டால் தொழுவார்கள். (அறிவிப்பு: ஹுதைஃபா இப்னுல் யமான் ﵁, அபூ தாவூது 1319, ஸஹீஹ் ஜாமிஃ 4703)

இன்னும் பிலால் ﵁ அவர்களிடம்,

قُمْ يَا بِلَالُ فَأَرِحْنَا بِالصَّلَاةِ

‘பிலாலே! எழுந்து பாங்கு சொல்வீராக. தொழுகையின் மூலம் எங்களுக்கு நிம்மதி அளிப்பாயாக’ என்று கூறுபவர்களாகவும் இருந்தார்கள். (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு முஹம்மது ﵁, அபூ தாவூது 4985, மிஷ்காத் 1253)

மனநெருக்கடிக்கு உள்ளானவர் அல்லாஹ்வுக்கு முன்னால் தொழுகையில் நிற்கும்போது, அவனை நினைவுகூரும்போது, அவன்மீது நம்பிக்கை வைத்து அவனிடமே தஞ்சமடைந்து விடும்போது அவனுக்கு முன்னால் சிரம்பணியும்போது அவரது உள்ளம் அமைதியடைகிறது. அவர் நிம்மதியை உணர்கிறார்.